பக்கங்கள் 20 + 03

# மாலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2058 | மாசி 06 வெள்ளிக்கிழமை 20.02.2026 | அதிர்வு 203

### தேர்தல் குறித்து ஆராய

## விஜித தலைமையில் விசேட குழு நியமனம்



நீண்டகாலமாக இழுபறியிலுள்ள மாகாண சபைத் தேர்தலை எந்த முறைமையின் கீழ் நடத்த வேண்டும் என்பது 03

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



# புதுடில்லியில் அநுர – மோடி இன்று வரலாற்றுச் சந்திப்பு

## இருதரப்பு உறவுகளில் புதிய அத்தியாயம் ஆரம்பம்

'AI Impact 2026' மாநாட்டில் பங்கேற்பதற்காக இந்தியாவுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள இலங்கை ஜனாதிபதி அநுரகுமார திஸ ாநாயக்க மற்றும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி ஆகியோருக்கு இடையிலான தீர்க்கமான சந்திப்பு இன்று நண்பகல் நடைபெற்றது.

புதுடில்லியிலுள்ள ஹைதராபாத் மாளிகையில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பின் போது, ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவை இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி மிகுந்த ஐக்கியத்துடன் வரவேற்றார். 03

# விசாரணைக்கு வருவதற்கு ரணிலின் மனைவி மறுப்பு உடல்நிலையைக் காரணம் காட்டி சி.ஐ.டிக்குக் கடிதம்

## வீட்டிலேயே வாக்குமூலம் பெறுமாறும் கோரிக்கை



முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் மனைவி பேராசிரியர் மைத்ரி விக்கிரமசிங்க, குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவில் இன்று ஆஜராக முடியாது என அறிவித்துள்ளார்.

தன்னுடைய உடல்நலக் குறைவு காரணமாக இன்று அந்தப் பிரிவில் முன்னிலையாக முடியாது என்பதை அவர் கடிதம் மூலம் அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தியுள்ளார்.

### வைத்தியர்களின் அறிவுரை

அவர் சிஐடிக்கு அனுப்பியுள்ள கடிதத்தில், தான் தற்போது உடல்நலக் குறைவினால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், வீட்டிலேயே தங்கி 03

### அடுத்த ஜனாதிபதித் தேர்தலின்போது

# சிறையில் அடைத்தாலும் நாமல் வெற்றியடைவார்

### மொட்டுக் கட்சி சூளுரை



"எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலின்போது நாமல் ராஜபக்ஷ சிறையில் அடைக்கப்பட்டாலும், சிறைக்குள் இருந்தே தேர்தலில் வெற்றி பெற்றவர் என்ற புதிய சரித்திரச் சாதனையை அவர் படைப்பார்" என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் (மொட்டுக் கட்சி) உறுப்பினர் திஸ்ஸ குட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

கொழும்பிலுள்ள கட்சித் தலைமையகத்தில் இன்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இந்தச் சந்திப்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

"தற்போது மக்கள் ஆதரவு மீண்டும் எமது பக்கம் திரும்புவதைக் கண்டு அஞ்சும் தரப்பினர், நாமல் ராஜபக்ஷவை அரசியல் ரீதியாக முடக்கும் முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றனர். அதன் ஒரு பகுதியாகவே அவருக்கு எதிராகச் சதித் திட்டங்கள் தீட்டப்படுகின்றன.

எந்தச் சவாலையும் எதிர்கொள்ள நாம் தயாராகவே இருக்கின்றோம். நாமல் ராஜபக்ஷவை சிறையில் அடைத்தாலும், நாம் வெளியில் இருந்து அவருக்காகத் தீவிரமாகச் செயற்படுவோம். ஒருவேளை ஜனாதிபதித் தேர்தல் நடக்கும்போது அவர் சிறையில் இருந்தாலும், மக்கள் ஆதரவுடன் அவர் நிச்சயம் வெற்றி பெறுவார். இதன் மூலம் சிறையில் இருந்து ஜனாதிபதித் தேர்தலை வென்றவர் என்ற பெருமையை அவர் வரலாற்றில் பதிவு செய்வார்." – என்றார்.

# நாமல் சிறை செல்வது செய்த பாவங்களுக்கே!

### ஊழல் குற்றவாளிகள் சட்டத்திலிருந்து தப்ப முடியாது என மொட்டுக் கட்சியின் கருத்துக்கு அமைச்சர் நளிந்த பதிலடி

"நாமல் ராஜபக்ஷ சிறைக்குச் சென்றால் அங்கிருந்தே ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெறுவார் என மொட்டுக் கட்சி கூறுவது வேடிக்கையானது. அவர் சிறைக்குச் செல்வது தேர்தல் வெற்றிக்காக அல்ல, கடந்த காலங்களில் இழைக்கப்பட்ட ஊழல் மற்றும் குற்றங்களுக்காகவே." – என்று அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ காரசாரமாகப் பதிலடி கொடுத்துள்ளார்.

மொட்டுக் கட்சிஇம் உறுப்பினர் திஸ்ஸ குட்டியாராச்சியின் கருத்துக்குப் பதிலளிக்கும் வகையில் ஊடகங்களிடம் பேசிய அவர் மேலும் கூறியதாவது:–

"யாரையும் அரசியல் பழிவாங்கலுக்காகச் சிறையில் அடைக்கும் எண்ணம் இந்த அரசுக்கு இல்லை. ஆனால், மக்கள் பணத்தைத் திருடியவர்கள் மற்றும் அரச அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்தியவர்கள் சட்டத்தின் பிடியில் இருந்து தப்ப முடியாது.



சிறையில் இருந்து கொண்டு தேர்தல் வெல்லலாம் என்பது பழைய காலத்துக் கற்பனை. நாட்டு மக்கள் ஊழலுக்கு எதிரான தெளிவான ஆணையை வழங்கியுள்ளனர். குற்றவாளிகளைச் சட்டத்தின் முன் நிறுத்துவதே எமது நோக்கம். அதைத் திசைதிருப்ப இவ்வாறான கருத்துக்களை மொட்டுக் கட்சியினர் முன்வைத்து வருகின்றனர்.

நாமல் ராஜபக்ஷ சிறைக்குச் சென்றால், அது அவர் செய்த செயல்களுக்கான அறுவடையே தவிர, தேர்தல் வியூகம் அல்ல." – என்று அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ சுட்டிக்காட்டினார்.

# மனைவியைக் கழுத்தறுத்து கொடூரமாக படுகொலை செய்த இராணுவச் சிப்பாய்

## காலியில் இன்று அதிகாலை பயங்கரம்

காலி – நெலுவ, ஹக்பிட்டிய பகுதியில் குடும்பத் தகராறு காரணமாக மனைவியின் கழுத்தை அறுத்துக் கொலை செய்த கணவர், பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளார். இந்த அதிர்ச்சிகரமான சம்பவம் இன்று வெள்ளிக்கிழமை அதிகாலை இடம்பெற்றுள்ளது.

**சம்பவம் குறித்த விவரம்**

இக்கொலைச் சம்பவத்தில் 32 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தாயான மஹாபடகே இரேஷா மதுமாலி என்பவரே உயிரிழந்துள்ளார். கொலையைச் செய்தவர் உயிரிழந்த பெண்ணின் சட்ட ரீதியான கணவரான 34 வயதுடைய முன்னாள் இராணுவச் சிப்பாய் எனப் பொலிஸார் உறுதிப் படுத்தியுள்ளனர்.



**கொலைக்கான காரணம்**

உயிரிழந்த பெண், தனது வீட்டிற்கு அருகிலுள்ள மற்றுமொரு நபருடன் தொடர்பு வைத்திருந்ததாகக் கூறப்படும் சந்தேகத்தின் பேரிலேயே இந்தக் கொடூரக் கொலை இடம்பெற்றுள்ளதாக முதற்கட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

மனைவியைக் கொலை செய்த சந்தேகநபர், அவரது தலையைத் துண்டித்து, வீட்டிலிருந்து சுமார் 200 மீற்றர் தொலைவில் உள்ள – குறித்த பெண்ணுடன் தொடர்பிருப்பதாகச் சந்தேகிக்கப்படும் நபரின் வீட்டு முற்றத்தில் வீசியுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

**சரணடைவும் விசாரணையும்**

இக்கொடூரச் செயலைச் செய்த பின்னர், சந்தேகநபரான கணவர் இன்று காலை நெலுவ பொலிஸ் நிலையத்தில் தானாக முன்வந்து சரணடைந்துள்ளார்.

சந்தேகநபரிடம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருவதுடன், அவர் உடுகம நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத் தப்படவுள்ளார்.

உயிரிழந்த பெண்ணின் சடலம் பிரேத பரிசோதனைக்காக வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளது.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**புதுடில்லியில் ..**

தனது அழைப்பை ஏற்று சர்வதேச செயற்கை நுண்ணறிவு மாநாட்டில் பங்கேற்றமைக்காக ஜனாதிபதிக்கு அநுரவுக்குப் பிரதமர் மோடி இதன்போது நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டார்.

**பொருளாதார மற்றும் கலாசார ஒத்துழைப்பு**

இரு தலைவர்களுக்கும் இடையிலான சுமுகமான கலந்துரையாடலைத் தொடர்ந்து, இரு நாட்டுத் தூதுக் குழுவினரும் பங்கேற்ற இருதரப்புப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகின. இதன்போது இலங்கை – இந்தியா இடையிலான வரலாற்று ரீதியான உறவுகளைப் புதிய தளத்திற்கு இட்டுச் செல்வது குறித்து விரிவாக ஆராயப்பட்டது. குறிப்பாக பின்வரும் துறைகளில் ஒத்துழைப்பை மேம்படுத்த இணக்கம் காணப்பட்டது:

**பொருளாதார மேம்பாடு**

* இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தகத் தடைகளை நீக்கி, முதலீடுகளை அதிகரித்தல்.

**தொழில்நுட்பம்**

* செயற்கை நுண்ணறிவு (AI) மற்றும் டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகளைப் பகிர்ந்து கொள்ளுதல்.

**கலாசாரம்**

* நீண்டகாலமாகத் தொடரும் இரு நாட்டு கலாச்சார மற்றும் சமூகத் தொடர்புகளை மேலும் பலப்படுத்துதல்.

**'டித்வா' சூறாவளி அனர்த்த உதவிக்கு நன்றி தெரிவிப்பு**

இலங்கையை அண்மையில் தாக்கிய "டித்வா" சூறாவளி அனர்த்தத்தின் போது, பாதிக்கப்பட்ட மக்களுக்கு இந்தியா வழங்கிய அவசர மனிதாபிமான உதவிகள் மற்றும் விசேட ஒத்துழைப்புகளுக்காக ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க, இந்தியப் பிரதமருக்குத் தனது விசேட நன்றியைத் தெரிவித்தார்.

அயல்நாடுகளுக்கு முன்னுரிமை அளிக்கும் இந்தியாவின் 'Neighborhood First' கொள்கையின் கீழ், இலங்கையின் இறையாண்மை மற்றும் பொருளாதார ஸ்திரத்தன்மைக்குத் தொடர்ந்தும் ஆதரவளிப்பதாக இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இதன்போது உறுதியளித்தார்.

---

**விசாரணைக்கு...**

சிகிச்சை பெறுமாறு வைத்தியர்கள் அறிவுறுத்தியுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார். அத்துடன், இந்த விவகாரம் தொடர்பாகத் தன்னிடம் வாக்குமூலம் பெறப்பட வேண்டுமெனில், அதனைத் தனது இல்லத்திலேயே பெற்றுக்கொள்ளுமாறு வைத்தியர்கள் ஆலோசனை வழங்கியுள்ளதாகவும் அவர் அந்தக் கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

**பின்னணி**

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கொண்ட பிரிட்டனுக்கான தனிப்பட்ட பயணத்துக்காக, 1.66 பில்லியன் ரூபாவுக்கும் அதிகமான அரச நிதியைத் தவறாகப் பயன்படுத்தியதாகக் கூறப்படும் குற்றச்சாட்டு தொடர்பிலேயே இந்த விசாரணை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இது குறித்து பேராசிரியர் மைத்ரி விக்கிரமசிங்கவிடம் வாக்குமூலம் பெறவுள்ளதாகக் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் ஏற்கனவே கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றத்திற்கு அறிவித்திருந்தது. இந்தநிலையிலேயே, இன்று முன்னிலையாக வேண்டிய பேராசிரியர் மைத்ரி விக்கிரமசிங்க, தனது இயலாமையை மருத்துவக் காரணங்களைக் காட்டித் தெரிவித்துள்ளார்.

---

**விஜித தலைமையில்...**

தொடர்பில் ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட விசேட நாடாளுமன்ற தெரிவுக்குழுவுக்குரிய உறுப்பினர்கள் பெயரிடப்பட்டுள்ளனர்.

நாடாளுமன்றம் இன்று முற்பகல் 9.30 மணிக்குச் சபாநாயகர் தலைமையில் கூடியது.

இதன்போதே மேற்படி குழுவுக்குரிய உறுப்பினர்களின் பெயர் விவரங்களைச் சபாநாயகர் அறிவித்தார்.

மேற்படி விசேட நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் தலைவராக அமைச்சர் விஜித ஹேரத் நியமிக்கப்பட்டுள்ளார்.

பிரதி அமைச்சர்களான முனீர் முலபர், சுனில் வட்டகல, அருண் ஹேமசந்திரா ஆகியோரும், நாடாளுமன்ற உறுப்பினர்களான ரஞ்சித் மத்தும பண்டார, மனோ கணேசன், லக்ஷ்மன் நிபுனராச்சி ஆகியோரும் குழுவில் இடம்பிடித்துள்ளனர்.

மேலும் இரா. சாணக்கியன், சமன்மலி குணசிங்க, தர்மபிரிய விஜேசிங்க, சந்தன சூரியாராச்சி மற்றும் நிஷாம் காரியப்பர் ஆகியோரும் இடம்பிடித்துள்ளனர்.

மாகாண சபைத் தேர்தலை எந்த முறைமையின் கீழ் நடத்துவது என்பது குறித்து நிலவும் அரசியல் மற்றும் சட்டச் சிக்கல்களுக்குத் தீர்வு காண்பதே இக்குழுவின் பிரதான நோக்கமாகும். இக்குழு தனது அறிக்கையை விரைவில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## மக்கள் செல்வாக்கை நிரூபித்துக் காட்ட

# மாகாண சபைத் தேர்தலை உடனே நடத்திக் காட்டுங்கள்

## அநுர அரசுக்கு மொட்டுக் கட்சி பகிரங்க சவால்




மாகாண சபைத் தேர்தலை காலம் தாழ்த்தாது விரைவாக நடத்துமாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி, தேசிய மக்கள் சக்தி அரசை மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

கொழும்பில் இன்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே, அக்கட்சியின் முக்கிய உறுப்பினரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான திஸ்ஸ குட்டியாராச்சி இந்தச் சவாலை விடுத்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:-

"ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சிக்கு மக்கள் மத்தியில் மீண்டும் செல்வாக்கு அதிகரித்து வருகின்றது. மக்களின் உண்மையான நிலைப்பாட்டை அறிந்துகொள்வதற்கு மாகாண சபைத் தேர்தலே தகுந்த களமாகும். எனவே, இந்தத் தேர்தலை உடனடியாக நடத்துமாறு அரசுக்கு நாம் சவால் விடுக்கின்றோம்.

தேர்தலை எதிர்கொள்ள நாம் தயாராகவே உள்ளோம். மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படும் பட்சத்தில், அதில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன நிச்சயம் பாரிய வெற்றியைப் பதிவு செய்யும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை." – என்றார்.

எல்லை நிர்ணயப் பிரச்சினைகள் மற்றும் பல்வேறு காரணங்களை முன்னிறுத்தி நீண்டகாலமாக இழுபறியிலுள்ள மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு அரசு தயங்குகின்றது என்று எதிர்க்கட்சிகள் தொடர்ச்சியாகக் குற்றம் சுமத்தி வரும் நிலையில், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் இந்த அறிவிப்பு அரசியல் களத்தில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# சட்டச் சிக்கல்கள் நீக்கப்பட்டு விரைவில் தேர்தல் நடத்தப்படும்

## செல்வாக்கு யாருக்கு என்பது தேர்தல் களத்தில் தெரியும் என்றும் மொட்டுக்கு அமைச்சர் பதிலடி




மக்கள் செல்வாக்கை நிரூபித்துக் காட்ட மாகாண சபைத் தேர்தலை உடனடியாக நடத்துமாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன அரசுக்கு விடுத்துள்ள சவாலுக்குச் பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் பேராசிரியர் ஏ.எச்.எம்.எச். அபயரத்ன உரிய முறையில் பதிலடி கொடுத்துள்ளார்.

முன்னதாக, இன்று கொழும்பில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் பேசிய மொட்டுக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ குட்டியாராச்சி, "பொதுஜன பெரமுனவுக்கு மக்கள் செல்வாக்கு அதிகரித்துள்ளது, முடிந்தால் மாகாண சபைத் தேர்தலை நடத்திப் பாருங்கள் அதில் நாங்களே வெற்றி பெறுவோம்" என்று அரசுக்குச் சவால் விடுத்திருந்தார்.

இதற்குப் பதிலளிக்கும் வகையில் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்டுள்ள அமைச்சர் பேராசிரியர் அபயரத்ன குறிப்பிட்டதாவது:-

"தேர்தல்களைக் கண்டு இந்த அரசு ஒருபோதும் அஞ்சப்போவதில்லை. மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்குத் தடையாக இருந்த சட்டச் சிக்கல்கள் மற்றும் எல்லை நிர்ணயக் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதிலேயே நாம் தற்போது கவனம் செலுத்தி வருகின்றோம்.

கடந்த காலங்களில் தேர்தல்களைத் தள்ளிப்போட்டவர்கள் இன்று எம்மைப் பார்த்து சவால் விடுப்பது வேடிக்கையானது. உரிய ஜனநாயக முறைப்படி, குறுகிய அரசியல் இலாபங்களுக்காக அன்றி, மக்களின் வரிப்பணம் வீணடிக்கப்படாத வகையில் தேர்தலை நடத்த அரசு திட்டமிட்டுள்ளது. பொதுஜன பெரமுனவின் செல்வாக்கு என்ன என்பது தேர்தல் களத்தில் மக்களுக்குத் தெளிவாகத் தெரியும்." – என்றார்.

மேலும், மாகாண சபைத் தேர்தலுக்கான பூர்வாங்க வேலைத்திட்டங்கள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்றும், விரைவில் இதற்கான உத்தியோகபூர்வ அறிவிப்புகள் வெளியாகும் என்றும் அமைச்சர் இதன்போது சுட்டிக்காட்டினார்.



## யாழ். பல்கலைப் பட்டமளிப்பு விழாவில்

# நயினாதீவு மாணவிக்கு 8 தங்கப் பதக்கங்கள்!

## மருத்துவத் துறையில் சாதனை

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகப் பொதுப் பட்டமளிப்பு விழாவில் நயினா தீவைச் சேர்ந்த மாணவி ஒருவர் 8 தங்கப் பதக்கங்களை வென்று சாதனை படைத்துள்ளார்.

யாழ். பல்கலைக்கழகத்தின் 40ஆவது பட்டமளிப்பு விழா நேற்று வியாழக்கிழமை ஆரம்பமானது. இதன்போதே, மருத்துவத் துறையில் 8 தங்கப் பதக்கங்களைப் பெற்று யாழ்ப்பாணம் நயினாதீவு மண்ணைச் சேர்ந்த மருத்துவபீட மாணவி அபிராமி நற்குணம் சாதனை படைத்துள்ளார். அவருக்குப் பாராட்டுக்களும், வாழ்த்துக் களும் குவிந்து வருகின்றன.






# யாழ். பல்கலை பொதுப் பட்டமளிப்பு விழா: 2 ஆம் நாளில் மின்னிய சாதனை மாணவி!

## முகாமைத்துவ பீடத்தில் 7 தங்கப் பதக்கங்களைச் சூடிய ஜஸ்மின் யூலிற்றா

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் 40 ஆவது பொதுப் பட்டமளிப்பு வைபவத்தின் இரண்டாம் நாள் அமர்வுகள் இன்று வெள்ளிக்கிழமை நடைபெற்றன.

நேற்று வியாழக்கிழமை ஆரம்பமாகிய இந்தப் பட்டமளிப்பு வைபவம் நாளைமறுதினம் 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை 12 அமர்வுகளாக நடைபெறுகின்றது.

இன்றைய அமர்வில் முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீடத்தைச் சேர்ந்த மாணவி செல்வி தங்கராசா ஜஸ்மின் யூலிற்றா ஏழு தங்கப் பதக்கங்கள் உட்படப் பணப்பரிசில்களையும் பெற்றுக்கொண்டார்.



















# காங்கேசன்துறை துறைமுக அபிவிருத்தி: அமைச்சர் குழுவினர் விசேட கள ஆய்வு!

**(எஸ்.நிதர்ஷன்)**

யாழ்ப்பாணம், காங்கேசன்துறை துறைமுகத்தின் எதிர்கால அபிவிருத்தி நடவடிக்கைகள் மற்றும் தற்போதைய முன்னேற்றங்கள் குறித்து ஆராய்வதற்காக உயர்மட்டக் குழுவினர் இன்று விசேட விஜயம் ஒன்றினை மேற்கொண்டனர்.

துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான போக்குவரத்து அமைச்சர் அனுர கருணாதிலக, பிரதி அமைச்சர் ஜனித ருவான் கொடித்துவக்கு மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் ரஜீவன் ஜெயசந்திரமூர்த்தி ஆகியோர் இன்று காலை துறைமுக வளாகத்திற்கு வருகை தந்து நிலைமைகளைப் பார்வையிட்டனர்.

இவ்விஜயத்தின் போது, துறைமுகத்தில் தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் நிர்மாணப் பணிகள் மற்றும் எதிர்காலத்தில் திட்டமிடப்பட்டுள்ள பாரிய அபிவிருத்தித் திட்டங்கள் குறித்து அதிகாரிகளுடன் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

குறிப்பாக பின்வரும் விடயங்கள் குறித்து அதிக கவனம் செலுத்தப்பட்டது:

பயணிகள் கப்பல் சேவை: இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையிலான பயணிகள் கப்பல் சேவையை மேலும் வலுப்படுத்துதல்.

**வர்த்தக நடவடிக்கைகள்**

* வட பிராந்தியத்தின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் வகையில் வர்த்தகக் கப்பல்களின் வருகையை அதிகரிப்பதற்கான உட்கட்டமைப்பு வசதிகள்.

**தொழில்நுட்ப மேம்பாடு**

* துறைமுகத்தின் ஆழத்தை அதிகரித்தல் மற்றும் நவீன களஞ்சிய வசதிகளை ஏற்படுத்துதல்.

இதேவேளை, காங்கேசன்துறை துறைமுகமானது பிராந்திய ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த ஒரு கேந்திர நிலையமாக இருப்பதால், அதன் அபிவிருத்திப் பணிகளை விரைவுபடுத்துமாறு துறைமுக அதிகாரிகளுக்கு அமைச்சர் இதன்போது ஆலோசனை வழங்கினார்.

இக்குழுவினருடன் துறைமுக அதிகாரசபையின் உயர் அதிகாரிகளும் கலந்துகொண்டிருந்தனர்.













நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# விட்டில் பூச்சிகள் நாம்

அறுபது ஆண்டுகளுக்கு மேல் எதிர்க்கட்சி வரிசையில் இருந்த போது கொள்கை, கோட்பாடுகள், சித்தாந்தங்கள் பற்றி அதிகம் பேசியது ஜே.வி.பிதான். அதற்காக பல்லாயிரம் பேரின் இரத்தத்தைச் சிந்த வைத்து உயிர்களைக் குடித்ததும் அதுதான். அதனையும் உள்ளடக்கிய தேசிய மக்கள் சக்தி இப்போது கோட்பாடுகளின் முரண்பாட்டில் சிக்கி குழப்பத்தில் இருப்பது அம்மணமாகத் தோற்றுகின்றது.

ஆரம்பத்தில் இரண்டு தடவைகள் ஆயுதக் கிளர்ச்சிகள் மூலம் அதிகாரத்தைக் கைப்பற்ற முயன்று தோல்வி கண்ட ஜே.வி.பி. இப்போது அந்த வழி வகையில் இருந்து திரும்பி விட்டது, அந்தச் சித்தாந்தக் கோட்பாட்டை விட்டு விலகி விட்டதாக அது கூறுவதை நம்புவோம். ஆனால் இப்படி நூற்றி எண்பது பாகை சித்தாந்தக் கோட்பாட்டில் ஜே.வி.பி. அடித்த - அடிக்கின்ற - குத்துக்கரணங்கள் பலப் பல.

சுமார் அரை நூற்றாண்டு காலம் கொடூர - குரூர - காட்டுமிராண்டித்தனமான - சட்டமாகத் தொடரும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்துக்கு மாற்றீட்டுச் சட்டம் கொண்டுவர முயற்சி எடுக்கப்பட்ட காலம் எல்லாம், மாற்றீடு வேண்டவே வேண்டாம், இந்தச் சட்டத்தை அடியோடு அகற்ற வேண்டும் என்று ஒற்றைக் குரலில் உறுதியாக சித்தாந்தம் பேசிய ஜே.வி.பி. இப்போது அதிகாரம் கைக்கு கிடைத்ததும் அதில் குத்துக்கரணம் அடித்து விட்டது.

மாகாண சபை அதிகாரப் பரவலாக்கல் முறைமை நடைமுறைக்கு வந்த போது அதனை ஒழிப்பதற்காக ஆயுதம் ஏந்தி, இரத்தக் களரிப் போராட்டம் நடத்திய ஜே.வி.பி. இப்போது ஆட்சி அதிகாரம் கைக்கு வந்த சமயத்தில் ஒருபுறம் அதிகார பரவலாக்கத்தை வரவேற்பதாகக் காட்டிக் கொண்டு மறுபுறம் அதற்கு ஆப்பு வைக்கும் முரண்பாடான சித்தாந்தத்தைக் கையாளுகின்றது.

தாம் ஆட்சிக்கு வந்தால் அடுத்த ஒரு வருடத்துக்குள் மாகாண சபைத் தேர்தல் என்று நாட்டு மக்களுக்கு வாக்குறுதி தந்த ஜே.வி.பி., இப்போது உள்ளூராட்சித் தேர்தலில் மக்களின் மன நிலையைப் படித்துக் கொண்டதும், அந்தக் கொள்கையிலும் அந்தர் பல்டி அடித்து விட்டது. இனி எப்போதும் மாகாண சபைத் தேர்தலை நடத்தும் முதுகுத் திராணி அதற்கு வரும் என்று தோன்றவில்லை.

தன்னுடைய அரசியல் ஆதாயங்களுக்காக காலங்காலமாக இந்திய எதிர்ப்பை வெளிப்படுத்தி, அதில் குளிர்காய்ந்து, அரசியல் செய்து வந்த ஜே.வி.பி. இப்போது இந்திய ராஜதந்திரத்தைக் கைப்பிடித்து அதில் தொங்கிக் கொண்டு நிற்கின்றது. இந்தியப் போக்கை வானளாவ புகழ்ந்து அதன் வழி தொடர்வதாக வெளியே காட்டுகின்றது.

இப்படி அடிப்படை கோட்பாடுகளிலேயே குத்துக்கரணங்களை முன்னெடுத்து, அதன் மூலம் தன் ஆட்சி அதிகாரத்தை தக்க வைப்பதற்காக நடிப்புலகின் உச்சத்தில் செயற்படும் ஜே.வி.பியின் அடிநாதமான பண்பியல்புகளைப் புரிந்து கொள்ளாமல், தமிழ் தேசியத்தை மறந்து, தமிழர்கள் அதன் பின்னால் போவது விளக்கில் வீழும் விட்டில் பூச்சிகளின் கதையை ஒத்ததாக இருப்பதுதான் மன வருத்தத்திற்குரியது.



## காரைதீவில் ஆடைத் திட்டம் ஆரம்பம்:

# பொது–தனியார் கூட்டாண்மையில் புதிய வேலைவாய்ப்பு உருவாக்கம்!

(நூருல் ஹுதா உமர்)

காரைதீவு பிரதேச மக்களின் பொருளாதார முன்னேற்றத்தையும், குறிப்பாக இளைஞர் – யுவதிகளுக்கான வேலைவாய்ப்பு உருவாக்கத்தையும் இலக்காகக் கொண்டு, காரைதீவு பிரதேச சபைத் தவிசாளர் எஸ். பாஸ்கரன் தலைமையிலான சபையினர் முன்னெடுத்த வேலைத் திட்டத்தின் அடிப்படையில், டியாரோ முதலீட்டு லிமிடெட் குழுமத்துடன் இணைந்து பொது – தனியார் கூட்டாண்மையில் ஆடைத் தொழிற்சாலை திட்டம் இன்று ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.



காரைதீவில் அமைக்கப்பட்டுள்ள இந்த சிறிய அளவிலான ஆடைத் தொழிற்சாலையின் தொடக்க விழாவில், அம்பாறை மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் கமல் நித்மினி, டியாரோ முதலீட்டு லிமிடெட் குழுமத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி பிரசன்ன சஞ்சீவ, பிரதி பிரதம நிறைவேற்று அதிகாரி நிரஞ்சன் வர்ணசூரிய, பிரதம செயல்பாட்டு அதிகாரி அருண் குமார், காரைதீவு பிரதேச சபை தவிசாளர் எஸ். பாஸ்கரன், காரைதீவு பிரதேச செயலாளர் பொறியியலாளர் ஜி. அருணன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு தொழிற்சாலையை நாடா வெட்டித் திறந்து வைத்தனர்.

இந்தத் திட்டம் பொதுச் சொத்துக்களை முறையாகவும் பயனுள்ளதாகவும் பயன்படுத்தி, அவற்றை மக்களின் நலனுக்காக மாற்றும் முயற்சியின் ஒரு பகுதியாகும். குறிப்பாக, பிரதேச யுவதிகளுக்கு அருகிலேயே நிலையான தொழில் வாய்ப்புகளை வழங்கி, குடும்பங்களின் பொருளாதார நிலையை உயர்த்துவதே இதன் முக்கிய நோக்கமாகும் என்றும் இதன்போது குறிப்பிடப்பட்டது.

மேலும், இந்தத் திட்டம் பிராந்திய தொழில்துறை வளர்ச்சியில் முக்கிய கட்டமாக அமையவுள்ளதாகவும், எதிர்காலத்தில் தொழிற்திறன் பயிற்சிகள், உற்பத்தித் திறன் மேம்பாடு மற்றும் நவீன தொழில்நுட்பங்களின் அறிமுகம் ஆகியவற்றின் மூலம் உள்ளூர் ஆடைத் துறையை நவீனமயமாக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்படும் எனவும் விழாவில் தெரிவிக்கப்பட்டது.

பொது – தனியார் கூட்டாண்மையின் சிறந்த முன்னுதாரணமாக அமையும் இந்த ஆடைத் தொழிற்சாலைத் திட்டம், காரைதீவு பிரதேசத்தின் பொருளாதார முன்னேற்றத்துக்கும் இளைஞர்களின் சுயநிறைவு வளர்ச்சிக்கும் புதிய வாய்ப்புகளை உருவாக்கும் முக்கிய மைல்கல்லாகக் கருதப்படுகிறது என்றும் கூறப்பட்டது.






# சந்நிதியான் ஆச்சிரம வாராந்த நிகழ்வில் மகாபாரத தொடர் அருளுரையும் உதவியும்






சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின், ஆச்சிரம முதல்வர் சாதனைத் தமிழன் மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில், ஆச்சிரமத்தின் வாராந்த நிகழ்வில் ஆன்மீக அருளுரையாக மகாபாரதம் என்ற தொடர் சொற்பொழிவை ஆசிரியர் இரா. செல்வவடிவேல் நிகழ்த்தினார்.

உதவித் திட்டங்களாகக் கண்டி வீதி, கொடிகாமம் பகுதியைச் சேர்ந்த குடும்பம் ஒன்றுக்கு வாழ்வாதார தேவைக்காக மாடு வளர்ப்பதற்கான கொட்டகை அமைப்பதற்கு ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா நிதி வழங்கப்பட்டது.

அத்துடன் வவுனியா கோவில் புளியங்குளம் ஸ்ரீ முத்துமாரியம்மன் அறநெறிப் பாடசாலையின் கோரிக்கைக்கு அமைவாக,

58 ஆயிரம் ரூபா பெறுமதியான ஹார்மோனியம் இசைக்கருவி வழங்கப்பட்டது.

இன்று வெள்ளிக்கிழமை இந்த நிகழ்வு இடம்பெற்றது.






# அம்பாறையில் கடல் அரிப்பால் பாதிப்பு!

( வி.ரி. சகாதேவராஜா)

அம்பாறை மாவட்டத்தில் நிலவும் அசாதாரண இயற்கை சூழல் காரணமாக பல இடங்கள் கடல் அரிப்புக்கு உள்ளாகி வருகின்றன.

குறிப்பாக நிந்தவூரை அடுத்துள்ள அட்டப்பள்ளம் எனும் கிராமம் மிகவும் மோசமான கடல் அரிப்புக்கு இலக்காகி வருகின்றது.

கடல் அருகில் இருந் சுமார் 100 இற்கும் அதிகமான தென்னைகளைக் கடல் உள்வாங்கியுள்ளது. சுமார் 100 மீற்றர் நிலப் பரப்பை கடலுக்குள் எடுத்துள்ளது.

அங்குள்ள மக்கள் தங்கள் குடிமனைகளும் கடலுக்குள் சென்று விடுமோ என்று தினம் தினம் அஞ்சி வருகின்றனர்.

உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.



# மூத்த ஊடகவியலாளரின் நான்கு நூல்கள் அறிமுகம்!

(த.சுபேசன்)

மூத்த ஊடகவியலாளரும் விரிவுரையாளருமான பொன்னையா விவேகானந்தனின் “இருப்பும் இடர்களும், அறிவோம் தமிழ்ப் பண்பாடு, நாடகங்கள் மற்றும் தமிழ்மொழிக் கல்வி” ஆகிய நான்கு நூல்களின் அறிமுக நிகழ்வு கடந்த புதன்கிழமை கிளிநொச்சி நகரில் தீபச்செல்வன் தலைமையில் இடம்பெற்றிருந்தது.

தமிழ்த் தேசியக் கலை இலக்கிய பேரவை, தாய்வீடு இதழ் மற்றும் கிளிநொச்சி மாவட்ட விவாதிகள் கழகம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த நூல்கள் அறிமுக நிகழ்வில் தமிழ் நாட்டு ஓவியர்களான மருது மற்றும் ஜீவா ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றியிருந்தனர்.

தமிழ் மற்றும் இலக்கியப் பற்றாளர்கள் எனப் பலரும் நூல்கள் அறிமுக நிகழ்வில் கலந்துகொண்டிருந்தனர்.










# மத்திய கிழக்கில் அரசியல் பலம் மிக்க நாடாக விளங்கும் சவூதி!

**இமாம் முஹம்மது பின் ஸஊத் (ரஹ்) சவூதி அரேபிய இராச்சியத்தை ஸ்தாபித்த நாள், சவூதி அரேபியாவின் ஸ்தாபக தினம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை ஆகும்.**

**- அபு அலா -**

'மன்னர் சல்மான் பின் அப்துல் அஸீஸ், பிரதமரும் பட்டத்து இளவரசருமான முஹம்மத் பின் சல்மான் மற்றும் இலங்கைக்கான சவூதி அரேபியத் தூதுவர் காலித் பின் ஹமூத் அல்–கஹ்தானி ஆகியோரின் பணிகள் பாராட்டத்தக்கன.

இமாம் முஹம்மது பின் ஸஊத் (ரஹ்) சவூதி அரேபிய இராச்சியத்தை ஸ்தாபித்த ஆண்டு நிறைவு நாள் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை ஆகும்.

அல் குர்ஆன், சுன்னா ஒளியில் நீதியையும் கருணையையும் கொண்டு ஆட்சி செய்யும் உன்னத அரசை ஸ்தாபித்த நாள்களில் சிறந்த நாளாக இத்தினம் விளங்குகிறது. இது சகல மக்களும் மகிழ்ச்சியும் கண்ணியமும் பெருமையும் பெற்றுக் கொண்ட உன்னத வரலாற்று நாள்களில் ஒன்றாகும்.

இமாம் முஹம்மது பின் ஸஊத் (ரஹ்) திர்இய்யாவில் வாதி அல் ஹனீபா எனும் இடத்திலிருந்துதான் சவூதி அரேபியாவின் ஸ்தாபக நாளை ஆரம்பித்தார். அங்கிருந்து நாட்டின் பொருளாதாரம், பாதுகாப்பு போன்றவற்றை ஸ்திரப்படுத்தியதோடு, நஜ்த் மாகாணத்திலுள்ள அனைத்து பகுதிகளையும் ஒன்றுபடுத்தி ஒரே குடையின் கீழ் கொண்டு வந்தார். மேலும், வெளி மாவட்டங்களில் இருந்து வரும் வியாபாரிகள் எவ்வித அச்சமுமின்றி தங்களது வியாபாரங்களை மேற்கொள்ள திர்இய்யா ஒரு பாதுகாப்பான வியாபார கேந்திர மையமாகவும் வெளி மாவட்டங்களில் இருந்து புனித ஹஜ், உம்ரா கிரியைகளை நிறைவேற்ற வரும் யாத்திரிகர்களுக்குப் பாதுகாப்பான பாதையாகவும் ஆக்கி வைத்தார்.

இமாம் முஹம்மது பின் ஸஊத் (ரஹ்), நஜ்த் பிரதேசத்தின் திர்இய்யாவில் ஆரம்பித்த சவூதி அரேபிய ஸ்தாபக பயணத்தில் பல முக்கிய சாதனைகளை நிலைநாட்டினார். அதாவது திர்இய்யா பகுதியைத் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து அங்கு அமைதியையும் பாதுகாப்பையும் உறுதிப்படுத்தினார். உள்ளூர் மக்களின் பாதுகாப்பை மாத்திரமல்லாமல், அயற்பிரதேசங்களின் பாதுகாப்பையும் பலப்படுத்தினார். அதன் ஊடாக எவரது தலையீடுகளும் இன்றி தனித்துவமான அரசியலை ஸ்திரப்படுத்தினார். ஆன்மீக சீர்திருத்தங்களையும் மேற்கொண்டார்.

அன்றைய அண்டை நாடுகளைச் சவூதி அரேபியாவுடன் இணைந்து கொள்ளுமாறும் அழைப்பு விடுத்தார். தனது நாட்டுக்கு எதிரான அனைத்து சவால்களையும் முறியடித்த அவர், நாட்டின் பொருளாதாரத்தையும் ஒழுங்குபடுத்தினார். நஜ்த் பிராந்திய மாகாணங்களையும் ஒன்றுபடுத்தினார். குறிப்பாக, வெளித் தாக்குதல்களில் இருந்து திர்இய்யாவைப் பாதுகாக்க முழுப் பகுதியிலும் பாதுகாப்பு சுவர் அமைத்தார். அத்தரபிய்யா எனும் இடத்தை தனது ஆட்சிக்கு உரிய தலைமையகமாக அமைத்தார்.

அதன் ஊடாக அனைத்து துறைகளிலும் தனித்துவம் மிக்க இராச்சியமாக உருவானது சவூதி அரேபியா. அன்று தொடக்கம் சவூதி அரேபியாவை ஆட்சி செய்த தலைவர்கள் அனைவரும் மிகச் சிறந்தவர்களாகவும், அனைவராலும் போற்றப்படுகின்றவர்களாகவும் விளங்குகின்ற போதிலும் இமாம் முஹம்மது பின் ஸஊத், மன்னர் அப்துல் அஸீஸ் (ரஹ்) ஆகியோர் சவூதி அரேபியா எனும் சிறந்த இஸ்லாமிய நாட்டை உருவாக்கிட அளப்பரிய பங்களிப்புக்களை நல்கியவர்கள் என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை.

பாரிய அர்ப்பணிப்புக்கள், தியாகங்கள் ஊடாக

தொடர்ச்சி▼

# மத்திய கிழக்கில் அரசியல் பலம் மிக்க நாடாக விளங்கும் சவூதி!

தொடர்ச்சி▲

இந்தச் சிறப்பான தேசம் கட்டியெழுப்பப்பட்டது என்றாலும் அதனை எதிர்கால சந்ததியினருக்கும் சிறந்த முன்மாதிரியுள்ள நாடாகவும், மனிதாபிமானத்தில் உலகத்தையே வென்ற நாடாகவும், உலக முஸ்லிம்களுக்குத் தலைமை தாங்கும் நாடாகவும், மத்திய கிழக்குக்குத் தலைமை தாங்கும் தேசமாகவும், பொருளாதாரம், நவீன ஆயுத பலம், படைபலம், பல நவீன கண்டுபிடிப்புகள் என அனைத்து விடயங்களிலும் உலக வல்லரசுகளோடு போட்டிப் போட்டு முன்னேற்றமடைந்த நாடாகவும் மாற்றியமைத்த பெருமை தற்போதைய மன்னர் சல்மான் பின் அப்துல் அஸீஸ் ஆல் ஸஊத், பிரதமரும் பட்டத்து இளவரசருமான முஹம்மத் பின் சல்மான் பின் அப்துல் அஸீஸ் ஆல் சஊத் ஆகியோரையே சாரும்.

மூன்று நூற்றாண்டுகளுக்கு முன் ஸ்தாபிக்கப்பட்ட சவூதி அரேபியா, கட்டம் கட்டமாக சகல துறைகளிலும் முன்னேற்றமடைந்து இன்று உலகில் மிகவும் வளர்ந்த நாடாக மாறியுள்ளதைக் காண முடிகிறது.

உலகுக்குப் பெரும் அச்சுறுத்தலாக விளங்கும் பயங்கரவாதத்தை ஒழிப்பதில் சவூதி அரேபியாவை விஞ்சும் அளவுக்கு வேறு நாடுகள் இல்லை. அந்தளவுக்குப் பயங்கரவாதத்தைத் தங்களது நாட்டில் அடியோடு துடைத்தெறிந்த நாடாகவும் பயங்கரவாதம் தலைதூக்கியுள்ள நாடுகளில் பயங்கரவாதத்தை ஒழிப்பதற்குத் தேவையான சகல ஒத்துழைப்புகளையும் வழங்கும் தேசமாகவும் விளங்குகிறது சவூதி.

அதேபோன்று ஊழல் ஒழிப்பு விடயத்துக்கும் அதிக முக்கியத்துவம் அளிக்கும் நாடாகச் சவூதி அரேபியா திகழுகிறது. தங்களது நாட்டில் உயர்ந்தவர், அரச குடும்பம் என்று கூட பாராமல் ஊழல் செய்தவர் யாராக இருந்தாலும் அவரைச் சட்டத்தின் முன் நிறுத்தித் தகுந்த தண்டனையைப் பெற்றுக்கொடுக்கவும் செய்கிறது சவூதி.

அத்தோடு ஊழல், மோசடி செய்யப்பட்ட பல கோடி ரியால்களைப் பறிமுதல் செய்து அரசுடமையாக்கவும் சவூதி பின் நிற்கவில்லை. அதன் பயனாக சவூதி அரேபியா பொருளாதாரத்தில் வெற்றி கண்டுள்ளது. எந்த நாட்டில் ஊழல் உள்ளதோ அந்த நாடு பொருளாதாரத்தில் பாரிய நெருக்கடியைச் சந்திப்பதோடு பொருளாதாரத்தில் வங்குரோத்து நிலையையும் அடையும். ஊழல் ஒழிப்பு விடயத்தில் மிகவும் கடுமையாக இருப்பதன் விளைவாகச் சவூதி பொருளாதாரத்தில் முன்னேற்றமடைந்துள்ளது எனலாம்.

மத்திய கிழக்கில் அரசியல் பலம் மிக்க நாடாக விளங்கும் சவூதி, உலகளவில் பாரிய அரசியல் பங்களிப்புகளைச் செய்யும் நாடாகவும் திகழ்கிறது. பல அற்புதமான கண்டுபிடிப்புகளுக்குச் சொந்தக்காரராகத் திகழும் அளவுக்கு சவூதி முன்னேறியுள்ளது. இது உலகுக்கே ஆச்சரியமான விடயமாகும். சவால்கள் பல சவூதி அரேபியாவுக்கு இருந்தாலும் அனைத்து சவால்களையும் தடைகளையும் தாண்டி சவூதி முன்னேற்றம் அடைந்து வருகிறது.

இதற்கு இளவரசர் முஹம்மத் பின் சல்மானின் விஷன் 2030 பாரிய பங்களிப்பு நல்குகிறது. நியோம், நவீன திர்இய்யா, கித்திய்யா, முகஅப், அல் உலா, மன்னர் சல்மான் பார்க், முஹம்மத் பின் சல்மான் விளையாட்டரங்கம், ரியாத் விமானம், அதி நவீன ஆயுத உற்பத்திகள் போன்றன அவற்றில் குறிப்பிடத்தக்கவையாகும்.

இவற்றின் ஊடாக உலகையே மெச்சும் அளவுக்கு பாரிய முன்னேற்றங்களைச் சவூதி அரேபியா கண்டு விட்டது.

மன்னர் சல்மானின், 'நமது நாடு அனைத்து நிலைகளிலும் வெற்றிகரமானதும் முன்னோடியானதுமான நாடாக இருக்க வேண்டும் என்பதே எனது முதல் இலக்கு. அதை அடைய உங்களுடன் இணைந்து பணியாற்றுவேன்' என்ற கூற்றும், முஹம்மத் பின் சல்மானின் 'ஒன்றாக, நாம் அனைவரும் எதிர்பார்க்கும் வகையில் நமது நாட்டைக் கட்டியெழுப்புவோம். வளமானதும், வலிமையானதும், அதன் ஆண், பெண் இருபாலாரின் முழுமையான ஒத்துழைப்புகளோடு, அவர்களின் திறன்களிலிருந்தும் பயனடைவோம்' என்ற கூற்றும் சவூதி அரேபியாவை பாரிய முன்னேற்றத்தின் பக்கம் கொண்டு சென்று கொண்டிருக்கிறது.

இவ்வாறான சூழலில், அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்பின் ஆலோசகர் ஜாரெட் குஷ்னர், 'இளவரசர் முஹம்மத் பின் சல்மான் ஒரு தொலைநோக்குப் பார்வை கொண்ட தலைவர், அவர் மத்திய கிழக்கில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்துவார் என நான் நம்புகிறேன். மேலும், உலகை சிறந்த இடமாக மாற்றிய பல விடயங்கள் அவரால் செய்ய முடிந்துள்ளது என நான் நம்புகிறேன்' என்றுள்ளார்.

அதேநேரம், அமெரிக்காவின் வெளியுறவு இதழ், சவூதி அரேபியா அதன் உறுதியான பட்டத்து இளவரசர் முஹம்மத் பின் சல்மானின் கீழ் அதிக இலட்சியங்களை அடைந்ததாக மாறியுள்ளது.

மேலும், சவூதி அரேபியாவின் அனைத்துத் தலைவர்களும் பலஸ்தீன மக்களுக்கு நிரந்தத் தீர்வைப் பெற்றுக் கொடுக்கப் பலதரப்பட்ட முயற்சிகளைத் தொடர்ந்தும் முன்னெடுத்து வருகின்றனர். அந்த மக்களுக்குத் தேவையான அனைத்து விதமான மனிதாபிமான உதவிகளையும் மேற்கொள்கின்றனர். அண்மையில் அமெரிக்காவும் இஸ்ரேலும் பலஸ்தீன மக்களை நாடு கடத்தி சவூதி அரேபியாவில் குடியமர்த்த வேண்டும் என்று கூறியதும் அதனை இளவரசர் முஹம்மத் பின் சல்மான் உடனடியாக நிராகரித்தார். பலஸ்தீன மக்கள் நாடோடிகள் அல்லர். அவர்கள் அப்பூமியின் பூர்வீகக் குடிகள். அவர்கள் கடைசி வரை அங்கு தான் வாழ வேண்டும். அவர்களை பலஸ்தீனில் இருந்து வெளியேற்ற ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம் எனக் கடுந்தொனியில் குறிப்பிட்டார்.

அத்தோடு, பல நாடுகளின் உள்நாட்டு யுத்தங்களை நிறுத்தவும் சமாதானத்தை நிலைநாட்டவும் அளப்பரிய சேவைகளைச் செய்யவும் சவூதி தவறவில்லை.

2023 இல் சவூதி அரேபியா முதல் அரபு பொருளாதார நாடானது. பொருளாதார வளர்ச்சியின் வேகத்தைப் பொறுத்தவரை, இது ஜி 20 குழுவிற்கு அடுத்தபடியாக உள்ளது. உலகின் 10 சக்திவாய்ந்ததும் செல்வாக்கு மிக்கதுமான பொருளாதார நாடுகளில் சவூதி உலகில் 9 வது இடத்தில் உள்ளது.

மேலும், ஆயுத மற்றும் படைபலத்தை முன்னிலைப்படுத்தும் நோக்கில், மத்திய கிழக்கில் ஆளில்லா விமானங்களை உற்பத்தி செய்யும் திறன்மிக்க நாடாகவும் சவூதி மாறியுள்ளது.

தொடர்ச்சி▼

# மத்திய கிழக்கில் அரசியல் பலம் மிக்க நாடாக விளங்கும் சவூதி!

தொடர்ச்சி▲

வருடமொன்றுக்கு 120 ஆளில்லா விமானங்களை (ட்ரோன்) சவூதி உற்பத்தி செய்கிறது.

சுற்றுலாத் துறையிலும் சவூதி அரேபியா பாரிய முன்னேற்றங்களைக் கண்டுள்ளது. முழு உலக மக்களும் சவூதி அரேபியாவை நோக்கிப்படையெடுக்கும் அளவுக்கு அங்கு சுற்றுலாத் துறை வளர்ச்சியடைந்துள்ளது. அத்தோடு, சவூதி அரேபியா ஜி 20 நாடுகள் அமைப்பிலும் பிரிக்ஸ் நாடுகள் அமைப்பிலும் மிக முக்கிய பங்களிப்பைச் செய்கிறது.

அல்லாஹ்வின் அருளாலும் மன்னர் சல்மான் பின் அப்துல் அஸீஸ் மற்றும் இளவரசர் முஹம்மத் பின் சல்மான் ஆகியோரின் அயராத முயற்சிகளாலும் திறம்மிக்க சவூதி மக்களின் சக்தியாலும் உலகின் கவனத்தை சவூதி தன் பக்கம் ஈர்த்துக் கொண்டுள்ளது. இத்தகைய மகத்தான வெற்றிகளையும் மறுமலர்ச்சிகளையும் முன்னேற்றத்தையும் சவூதி அரேபியாவால் தொடர்ந்தும் அடைய முடிகிறது.

அதேநேரம், பட்டத்து இளவரசர் முஹம்மத் பின் சல்மான், தேசிய சர்வதேச அனைத்து விடயங்களில் முன்னிலையில் இருப்பதோடு, நம்பிக்கைக்குரியவராகவும் அரபு இஸ்லாமியத் தேசத்தின் நாயகனாகவும் சர்வதேசம் மதிக்கும் மிகப் பெரிய தலைவர்களில் ஒருவராகவும் திகழுகிறார்.

சவூதியின் ஸ்தாபக நாளான பெப்ரவரி 22 ஆம் திகதியை சவூதி மக்களும் பொதுவாக அரேபியர்களும் உலக மக்களும் போற்றுகின்ற இந்தத் தருணத்தில் இரு புனித பள்ளிவாசல்களின் பாதுகாவலரும் மன்னருமான சல்மான் பின் அப்துல் அஸீஸ் ஆல் ஸஊத், பட்டத்து இளவரசரும் பிரதமருமான முஹம்மத் பின் சல்மான் பின் அப்துல் அஸீஸ் ஆல் ஸஊத் மற்றும் இலங்கைக்கான சவூதி அரேபிய தூதுவர் காலித் ஹமூத் அல் கஹ்தானி உட்பட சவூதி அரேபிய மக்கள் அனைவருக்கும் இலங்கை மக்கள் சார்பாக பாராட்டுதல்களையும் வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கின்றனர். ■

# ஜீவ ஊற்று அன்பின் கரம் நிறுவனத்தின் 184 ஆவது வீட்டுத் திட்டப் பணி ஆரம்பம்!









(மரியசீலன் திலைக்ஸ்)

ஜீவ ஊற்று அன்பின்கரம் நிறுவனத்தின் ஏற்பாட்டில் வழங்கப்பட்ட வீட்டுத் திட்டப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

நேற்று காலை வடமராட்சி கிழக்கு மணல்காட்டு பகுதியில் உள்ள ஒரு குடும்பத்தினருக்கு ஜீவ ஊற்று அன்பின்கரம் நிறுவனத்தினத்தின் ஏற்பாட்டில் ஆஸ்ரேலியாவில் வசிக்கும் சிவகுமாரன் தாரணி குடும்பத்தினரின் நிதி அனுசரணையில் (அவர்களது 6 ஆவது வீடு ஜீவ ஊற்று அன்பின் கரத்தின் 184 ஆவது வீட்டுக்கு அடிக்கல் நட்டு வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் ஜீவ ஊற்று அன்பின் கரத்தின் கிளிநொச்சி, முல்லைத் தீவு, வடமராட்சி அமைப்பாளர்கள் மற்றும் மணல்காட்டு பங்குத்தந்தை மற்றும் அருட்சகோதரிகள், பருத்தித் துறை பிரதேச சபை உறுப்பினர் அ.அகஸ்ரின், மணல்காட்டு ஜே/418 கிராம அலுவலர், அபிவிருத்தி உத்தியோகத்தர், வீட்டுத் திட்ட பயனாளிகள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

# பயங்கரவாதத் தடைச் சட்டம் முழுமையாக நீக்கப்பட வேண்டும்

## பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமும் வேண்டாம் என புதுக்குடியிருப்பு பிரதேச சபையில் தீர்மானம்

**(சண்முகம் தவசீலன்)**

பயங்கரவாதத் தடைச் சட்டம் (பீ.ரீ.ஏ) முழுமையாக நீக்கப்பட வேண்டும் எனவும், தற்போது அரசால் புதிதாக முன்மொழியப்பட்டுள்ள பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம்; (PSTA) அமல்படுத்தக் கூடாது எனவும் புதுக்குடியிருப்பு பிரதேச சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் மாதாந்த அமர்வு நேற்று பிரதேச சபையின் தவிசாளர் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது சபை உறுப்பினர்களான சிவபாதம் குகனேசன் மற்றும் குமாரவேலு அகிலன் ஆகியோரால் பயங்கரவாதத் தடைச் சட்டம் முற்றாக நீக்கப்பட வேண்டும் எனவும் தற்போது அரசினால் புதிதாக முன்மொழியப்பட்டுள்ள பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் அமுல்படுத்தக் கூடாது எனவும் பிரேரணை சபையில் முன் வைக்கப்பட்டது.

குறித்த தீர்மானத்துக்குத் தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் நடுநிலை வகிக்க ஏனைய உறுப்பினர்களின் ஆதரவுடன் பிரேரணை நிறைவேற்றப்பட்டுள்ளது.

21 உறுப்பினர்களை கொண்ட புதுக்குடியிருப்பு பிரதேச சபையில் 3 உறுப்பினர்கள் சபைக்கு சமூகமளிக்கவில்லை. வருகைதந்த 18 உறுப்பினர்களில் தேசிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் 4 பேர் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாமல் இருக்க, மிகுதி 14 பேரும் குறித்த தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களித்து பிரேரணையை நிறைவேற்றியிருந்தனர்.



# யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் வெற்றிலைப் பயன்பாட்டுக்குத் தடை விதிப்பு

## பணிப்பாளர் டாக்டர் சத்தியமூர்த்தி அறிக்கை வெளியீடு

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலை வளாகத்துக்குள் வெற்றிலை பயன்படுத்துவதற்கும் எச்சில் துப்புவதற்கும் டை விதிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை பணிப்பாளர் டாக்டர் த. சத்தியமூர்த்தி அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை தினசரி பல்லாயிரக் கணக்கான நோயாளிகள் மற்றும் பொதுமக்கள் வருகை தரும், மிகுந்த நெரிசல் கொண்ட சுகாதார நிலையை மாகும். இவ்வளவு பெரும் மக்கள் வருகையுள்ள சூழலில் வைத்திய சாலையை சுத்தமாகவும் சுகாதாரத் தரநிலைகளுக்கு இணங்கவும் பேணுவது எங்களின் முதன்மைப் பொறுப்பாகும்.

இத்தகைய நோக்கத்துடன், நூற்றுக்கும் மேற்பட்ட சுத்திகரிப்பு தொழிலாளர்கள் தினமும் இரவு பகலாகப் பணியாற்றி, விடுதிகள்,



நடைபாதைகள், கழிப்பறைகள் உள்ளிட்ட அனைத்து பகுதிகளையும் மிகுந்த தூய்மையுடன் பராமரித்து வருகின்றனர். அவர்களின் அர்ப்பணிப்புமிக்க சேவையால் வைத்திய சாலை சுத்தமான சூழலை நிலைநிறுத்தி வருகிறது.

ஆயினும், சிலர் வெற்றிலையைப் பயன்படுத்தி எச்சில் துப்புவதன் மூலம் வைத்தியசாலை வளாகத்தில் அசுத்தமும் அசௌகரியமும் ஏற்படுகிறது. இது சுகாதாரத் தரநிலைகளுக்கு முரணானதோடு, நோயாளிகள் மற்றும் பார்வையாளர்களின் நலனுக்கும் பாதிப்பை ஏற்படுத்தக்கூடியது.

அரசா பொது இடங்களை பாதுகாக்கும் விதிமுறைகள் மற்றும் சுற்றுச் சூழல் பாதுகாப்பு வழிகாட்டுதல்களுக்கு அமைவாக, வைத்தியசாலை வளாகத்தில் வெற்றிலைப் பயன்படுத்துதல் மற்றும் எச்சில் துப்புதல் முற்றாகத் தடை செய்யப்பட்டிருக்கிறது. இதுகுறித்து பல அறிவிப்புகள் மற்றும் எச்சரிக்கை பலகைகள் வைத்தியசாலை முழுவதும் பதியப்பட்டுள்ளன.

இனிவரும் காலங்களில் இத்தடை மீறப்படின், சம்பந்தப்பட்டவர்கள் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டு நீதிமன்ற நடவடிக்கைக்காக அனுப்பப்படுவார்கள் என்பதை பொதுமக்களின் கவனத்துக்குக் கொண்டு வருகிறோம்.

இந்த வைத்தியசாலை உங்கள் அனைவரின் வைத்தியசாலையாகும். அதனை சுத்தமாகவும் சுகாதாரமான சூழலுடனும் பாதுகாப்பது ஒவ்வொருவரின் பொறுப்பாகும். எனவே, இத்தகைய செயல்களில் இருந்து முழுமையாக விலகி, சுத்தம் மற்றும் ஒழுங்கை பேணுவதில் ஒத்துழைக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.- என்றுள்ளது.



# அம்பாறையில் அடை மழையுடன் பலத்த காற்று; கடல் கொந்தளிப்பு!

(பாறுக் ஷிஹான்)

அம்பாறை மாவட்டத்தில் தொடர் அடை மழை காரணமாக மீண்டும் வெள்ள நிலைமை ஏற்பட்டுள்ளது.

மேலும் பல்வேறு இடங்களில் அடை மழை காரணமாக மரங்கள் உடைந்துள்ளன. பலத்த காற்று காரணமாக சேதங்களும் ஏற்பட்டுள்ளன.

குறிப்பாக அம்பாறை மாவட்ட கரையோரப் பிரதேசங்களில் அட்டாளைச்சேனை, தைக்கா நகர் , அக்கரைப்பற்று, நிந்தவூர், காரைதீவு,மாவடிப்பள்ளி சாய்ந்தமருது, பாண்டிருப்பு, கல்முனை, நாவிதன்வெளி, மருதமுனை, பெரிய நீலாவணை மல்வத்தை போன்ற பிரதேசங்களும் தாழ்நிலப் பகுதிகளிலுள்ள சில வீட்டுத்திட்டங்களும் நீரில் மூழ்கிக் காணப்படுகின்ற நிலைமை ஏற்பட்டுள்ளது.

இந்தப் பகுதிகளில் பெய்த கனமழை மற்றும் கடும் காற்று அழுத்தத்தால் பொது மக்களுக்கு கடும் இடையூறு ஏற்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்டத்தில் தொடர்ந்து பெய்து வரும் அடை மழையால் தாழ்ந்த பிரதேசங்களில் வெள்ளம் ஏற்பட்டுள்ளது. வீதிகள் பலவும் நீரில் மூழ்கி வருகின்றன. மாவட்டத்தில் தொடர்ந்தும் மழை பெய்து வருகின்றது. இதனால் தாழ்நிலப் பிரதேசங்கள், வீடுகள், வீதிகள் முற்றாக வெள்ளத்தில் மூழ்கக் கூடிய அபாயமும் உள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

அம்பாறை மாவட்டத்தில் பெய்து வரும் அடைமழை காரணமாக குளங்களின் நீர்மட்டம் உயர்ந்து வருவதுடன் பிரதான வீதிகளில் வெள்ளப்பெருக்கு ஏற்படும் அபாயம் உள்ளது. பொது மக்கள் அவதானமாக செயற்படுமாறு வலியுறுத்தப்பட்டுள்ளனர்.

# யாழ். நூலகத்தில் நடந்த விசேட செயலமர்வில் ஒருமித்த கருத்து





(எஸ்.நிதர்ஷன்)

நடைமுறையில் இருக்கும் பயங்கரவாதச் சட்டத்தையும் உருவாக்கப்படும் அதற்கு ஈடான மற்றொரு சட்டத்தையும் இல்லாது செய்து மக்கள் மீது திணிக்கப்படும் அச்சுறுத்தல்களையும் அடக்கு முறைகளையும் நிறுத்த வேண்டும் என்ற விழிப்புணர்வு நோக்குடன் சட்டம் மற்றும் சமூக நம்பிக்கையின் மக்கள் நாடாளுமன்றம் என்ற அமைப்பு இன்று செயலமர்வொன்றை முன்னெடுத்தது.

யாழ். பொது நூலக கேட்போர் கூடத்தில் பலதரப்பட்ட அமைப்புகளின் பிரசன்னத்துடன் இந்த நிகழ்வு நடைபெற்றது.

சட்டத்தரணி பெனிஸ்லாஸ் ருஷான் இந்தச் செயலமர்வில் கருத்துரைக்கையில்,

இலங்கையில் பயங்கரவாதத்தைத் தடுப்பதற்காக 1979 ஆம் ஆண்டு 48 ஆம் எண் கொண்ட பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் (ீவுயு) ஒரு தற்காலிகச் சட்டமாகவே அறிமுகப்படுத்தப்பட்டது.

ஆனால் அது 1982 இல் நிரந்தரச் சட்டமாக மாறியது. தேசிய பாதுகாப்பை உறுதி செய்தல் என்ற பெயரில் கொண்டுவரப்பட்ட இந்தச் சட்டங்கள், 40 ஆண்டுகளுக்கும் மேலாக பல்வேறு அரசுகளால்தவறாகப்பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

ீவுயு இன் கீழ் நீதித்துறையின் மேற்பார்வை இல்லாமல் நபர்கள் கைது, நீண்டகால தடுப்புக்காவல், சித்திரவதை, குறிப்பாக இன சிறுபான்மையினர், அரசியல் எதிரிகள், ஊடகவியலாளர்கள் மற்றும் சமூக ஆர்வலர்களை அடக்குமுறை செய்தல் போன்ற கடுமையான மனித உரிமை மீறல்கள் பதிவாகியுள்ளன.

1983-2009 உள்நாட்டுப் போரின் போது தமிழ் மக்களுக்கு எதிராகவும், 1988-89 ஆம் ஆண்டுகளில் மக்கள் விடுதலை முன்னணி மற்றும் மாணவர் இயக்கங்களுக்கு எதிராகவும், 2019 ஈஸ்டர் தாக்குதல்களுக்குப் பின் முஸ்லிம் மக்களுக்கு எதிராகவும், 2022 போராட்டத்துக்குப் பின்னர் போராட்டக்காரர்களுக்கும் இந்தச் சட்டம் பயன்படுத்தப்பட்டுள்ளது.

இலங்கை அரசு ீவுயு ஐ இரத்துச் செய்வதாக ஐக்கிய நாடுகள் சபை உட்பட சர்வதேச மட்டத்தில் பல சந்தர்ப்பங்களில் உறுதியளித்திருந்தாலும், அது நடைமுறையில் செயல்படுத்தப்படவில்லை.

இந்த நிலையில் 2024இல் ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்களின் போது, தேசிய மக்கள் சக்தி (NPP) PTA இரத்துச் செய்யப்படும் என்று மக்களுக்கு உறுதியளித்தது.

அந்தக் கொள்கை அறிக்கைகளில், “பயங்கரவாத எதிர்ப்புச் சட்டங்கள் உட்பட அனைத்து அடக்குமுறைச் சட்டங்களும் இரத்து செய்யப்படும்” என்றும் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.

இருப்பினும், PTA ஐ ஒழிப்போம் என்ற போர்வையில், தற்போது பயங்கரவாதத்தில் இருந்து அரசைப் பாதுகாக்கும் சட்ட வரைவு (PSTA) முன்வைக்கப்பட்டமை, மக்கள் ஆணைக்கு எதிரான செயலாக இருக்கின்றது.

அதுமட்டுமன்றி இலங்கையில் ஏற்கனவே தண்டனைச் சட்டக் கோவை, பயங்கரவாதம் தொடர்பான சர்வதேச உடன்படிக்கைகள், அதன் உளவுத்துறை சேவைகள், பயங்கரவாத விசாரணைப் பிரிவுகள் மற்றும் சட்ட பொறிமுறைகள் இருப்பதால், தனித்தனி அடக்குமுறை பயங்கரவாதச் சட்டங்கள் தேவையில்லை.

PTA யின் கீழ் பல ஆண்டுகளாக நியாயமற்ற வகையில் தடுத்து வைக்கப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்ட நபர்கள் இருந்தாலும், அவர்கள் அனுபவித்த அநீதிகளுக்குச் சமூக அல்லது சட்டரீதியான இழப்பீடுகள் ஏதும் கிடைக்கவில்லை.

இந்தச் சட்டங்கள் வரலாறு முழுவதும் மக்களை மிரட்டவும் அடக்குமுறைக்கான கருவிகளாகவும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

PSTA நிறைவேற்றப்பட்டால், சாதாரண குடிமக்களின் கருத்துச் சுதந்திரம், எதிர்ப்பு தெரிவிக்கும் உரிமை மற்றும் தனியுரிமை என்பன கடுமையாக கட்டுப்படுத்தப்படும்.

எனவே, இந்தச் சட்ட வரைவு குறித்துப் பொது மக்களை விழிப்புணர்வு செய்தல், நீதி அமைச்சு ஊடாக எதிர்ப்பு கருத்துகளை முன்வைத்தல், நாடாளுமன்ற பிரதிநிதிகளுக்கு பொதுமக்களின் எதிர்ப்பைத் தெளிவாக அறிவித்தல், சமூக ஊடகங்கள் மற்றும் பொது உரையாடல் மூலம் திறந்த விவாதத்தை முன்னெடுத்தல் என்பன அத்தியவசியமான செயற்பாடுகளாகும்.

இந்த சட்ட வரைவை தோற்கடிப்பதன் மூலம் மட்டுமே இலங்கையின் ஜனநாயகம், மனித உரிமைகள் மற்றும் அனைத்து குடிமக்களின் சுதந்திரங்களையும் பெறமுடியும் என்றும் இந்த செயலமர்வில் தெரிவிக்கப்பட்டது.





# ரி-20: சுப்பர்-8 முதல் ஆட்டம்

## பாகிஸ்தான்-நியூஸிலாந்து நாளை மோதல்

ரி-20 உலகக் கிண்ணத் தொடரின் சுப்பர் - 8 போட்டிகள் நாளை கொழும்பில் ஆரம்பமாகவுள்ளன. முதல் ஆட்டத்தில் பாகிஸ்தான் - நியூஸிலாந்து அணிகள் மோதவுள்ளன.

ரி-20 உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடர் இலங்கை மற்றும் இந்தியாவில் நடைபெற்றுவருகின்றது..

கடந்த 7ஆம் திகதி ஆரம்பித்த இத்தொடரில் 20 நாடுகள் பங்கேற்றுள்ளன. லீக் போட்டிகள் இன்றுடன் முடிவடைகின்றன. அதில் ஆஸ்திரேலியா மற்றும் ஓமான் அணிகள் மோதவுள்ளன.

நடப்பு சம்பியன் இந்தியா, பாகிஸ்தான், சிம்பாப்வே, இலங்கை, மேற்கிந்தியத் தீவுகள், இங்கிலாந்து, தென்னாபிரிக்கா மற்றும் நியூஸிலாந்து ஆகிய நாடுகள் சுப்பர் 8 சுற்றுக்குத் தகுதி பெற்றுள்ளன.

முன்னாள் சாம்பியன் ஆஸ்திரேலியா, அயர்லாந்து, ஓமன், அமெரிக்கா, நெதர்லாந்து, நமீபியா, ஸ்கொட்லாந்து, இத்தாலி, நேபாளம், ஆப்கானிஸ்தான், ஐக்கிய அரபு இராச்சியம், கனடா ஆகிய அணிகள் வெளியேற்றப்பட்டன.

இந்நிலையில், சுப்பர் 8 சுற்று நாளை (21) தொடங்குகிறது. இதில் விளையாடும் 8 நாடுகளும் 2 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

குழு - 1இல் இந்தியா, தென்னாபிரிக்கா, மேற்கிந்தியத் தீவுகள், சிம்பாப்வே ஆகியவையும், குழு - 2 இல் இங்கிலாந்து நியூஸிலாந்து, பாகிஸ்தான், இலங்கை ஆகியவையும் இடம் பெற்றுள்ளன.

ஒவ்வொரு அணியும், தங்கள் பிரிவுகளில் உள்ள மற்ற அணிகளுடன் தலா ஒரு முறை மோத வேண்டும். இதன் முடிவில் இரண்டு பிரிவுகளிலும் முதல் 2 இடங்களைப் பிடிக்கும் அணிகள் அரையிறுதிக்கு முன்னேறும்.

சுப்பர் - 8 சுற்றில் நாளை இரவு 7 மணிக்கு கொழும்பில் நடைபெறும் முதல் ஆட்டத்தில் நியூஸிலாந்து-பாகிஸ்தான் (குழு - 2) அணிகள் மோதவுள்ளன. இரு அணிகளும் இந்தத் தொடரில் தலா ஒரு போட்டியில் தோற்றன. சுப்பர் 8 சுற்றில் வெற்றியுடன் தொடங்க இரு அணிகளும் கடுமையாகப் போராடும். இதனால் ஆட்டம் விறுவிறுப்பாக இருக்கும் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

# தமிழக முதல்வர் ஸ்டாலினுக்கு எதிரான தேர்தல் வழக்கின் தீர்ப்பு தள்ளிவைப்பு

தமிழக முதல்வர் ஸ்டாலினுக்கு எதிரான தேர்தல் தொடர்பான வழக்கின் தீர்ப்பு தள்ளிவைக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் 2011 ஆம் ஆண்டு நடந்த சட்டப்பேரவைத் தேர்தலின் போது, கொளத்தூர் தொகுதியில் தி.மு.க. சார்பில் மு.க.ஸ்டாலின் போட்டியிட்டார். அவரை எதிர்த்து அதிமுக சார்பில் சைதை துரைசாமி போட்டியிட்டார்.

அப்போது, தேர்தல் ஆணையம் நிர்ணயித்த தொகைக்கு அதிகமாக ஸ்டாலின் செலவு செய்தமையுடன், அதிகார துஷ்பிரயோகத்திலும் ஈடுபட்டமையால், கொளத்தூர் தொகுதியில் ஸ்டாலின் வெற்றி பெற்றமை செல்லாது என அறிவிக்க வேண்டும் என்று சைதை துரைசாமி உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த



மனுவில் கூறிஇருந்தார்.

இந்த மனுவை உச்ச நீதிமன்ற நீதிபதிகள் ஜே.கே.மகேஸ்வரி, விஜய் பிஷ்னோய் அமர்வு நேற்று விசாரித்தது. தமிழக முதல்வர் ஸ்டாலின் சார்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர் கபில் சிபல், "மனுதாரர் தெரிவிக்கும் குற்றச்சாட்டுகளுக்கு ஆதாரங்கள் இல்லை.

வாக்காளர்களுக்கு பணம் விநியோகம் செய்ததற்கான குற்றச்சாட்டை சந்தேகத்துக்கு இடமின்றி நிருபிக்கவில்லை. இதைக் கருத்தில் கொண்டே, உயர் நீதிமன்றம் சைதை துரைசாமியின் மனுவைத் தள்ளுபடி செய்துள்ளது" என்று வாதிட்டார்.

சைதை துரைசாமி சார்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர் "கொளத்தூர் தொகுதியில் வாக்காளர்களுக்கு நவீன முறையில் பணப்பட்டுவாடா செய்ததமைக்கான ஆதாரங்கள் உள்ளன. உயர் நீதிமன்ற தீர்ப்பை ரத்து செய்ய வேண்டும்" என்று வாதிட்டார்.

இரு தரப்பு வாதங்களை கேட்ட உச்ச நீதிமன்ற அமர்வு, இரு தரப்பும் எழுத்துப்பூர்வ வாதங்களை எதிர்வரும் புதன்கிழமைக்குள் தாக்கல் செய்யுமாறு உத்தரவிட்டு, திகதி குறிப்பிடாமல் தீர்ப்பை தள்ளி வைத்தது.

# மக்கள் மனநிலைக்கு நேர்மாறாக தி.மு.க கூட்டணியில் தே.மு.தி.க

## ஜி.கே.வாசன் கருத்து

தி.மு.க. கூட்டணியில் தே.மு.தி.க. இணைந்தது தமிழக மக்களின் மனநிலைக்கு நேர்மாறாக உள்ளது என்று த.மா.கா. தலைவர் ஜி.கே.வாசன் தெரிவித்துள்ளார்.

தமாகா சார்பில் திருச்சி, தஞ்சை, புதுக்கோட்டை, திருவாரூர், அரியலூர், பெரம்பலூர், மயிலாடுதுறை, நாகை மாவட்டங்களை உள்ளடக்கிய டெல்டா மண்டல, மாவட்டத் தலைவர்கள், நிர்வாகிகள் கலந்தாய்வுக் கூட்டம் திருச்சியில் அக்கட்சித் தலைவர் ஜி.கே.வாசன் தலைமையில் நேற்று நடைபெற்றது. கூட்டத்தில் சட்டப்பேரவைத் தேர்தலில் போட்டியிட விரும்பும் நிர்வாகிகள் ஜி.கே.வாசனிடம் விருப்ப மனுக்களை வழங்கினர். முன்னதாக, ஜி.கே.வாசன் செய்தியாளர்களிடம் கருத்து தெரிவிக்கையில்,

"விஜயகாந்த் இருந்தவரை தி.மு.கவுடன் தே.மு.தி.க. கூட்டணி அமைக்கவில்லை. தற்போது தி.மு.க. உடன் தே.மு.தி.க. கூட்டணி அமைத்துள்ளது மக்கள் மனநிலைக்கு நேர்மாறாக



உள்ளது. ஆனால், மக்கள் ஆதரவு அதிகம் உள்ளதால் தேசிய ஜனநாயகக் கூட்டணி உறுதியாக வெற்றி பெறும்.

மாநில சுயாட்சிக்காக சட்டத் திருத்தம் கொண்டு வர வேண்டும் என முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார். இவர்கள் மத்தியில் ஆட்சி பொறுப்பில் இருந்தபோதே இதைச் செய்திருக்கலாமே? திமுக அரசின் மீது மக்கள் கோபமாக இருப்பதால் மாநில சுயாட்சி, ஆளுநர் மீது புகார் என மக்களை ஏமாற்ற நினைக்கிறார்கள். தங்களை ஏமாற்றிய தி.மு.கவுக்கு எதிராக வாக்களித்து மக்கள் அவர்களை ஏமாற்றுவார்கள்.

த.மா.காவின் குரல் சட்டப்பேரவையில் ஒலிக்க வேண்டும் என்பதை நோக்கியே என்கவனம் உள்ளது. மாநிலங்களவை உறுப்பினர் குறித்து தற்போது நாங்கள் யோசிக்கவில்லை. லாப நஷ்டங்களை தாண்டி கூட்டணி தர்மத்தை கடைபிடிக்கும் கட்சி தமாகா தான்." என்று தெரிவித்துள்ளார்.

# ராகுல் உள்ளிட்ட எம்.பி.க்களுக்கு கொலை மிரட்டல் விடுத்த நபர் கைது

ராகுல் காந்தி உள்ளிட்ட காங்கிரஸ் எம்.பி.க்களுக்கு கொலை மிரட்டல் விடுத்தவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சமூக ஊடகத்தில் அண்மையில் வெளியான ஒரு காணொலி ஒருவர் தன்னை வலதுசாரி அமைப்பான கர்னி சேனாவின் செய்தித் தொடர்பாளர் ராஜ் சிங் என்று அறிமுகம் செய்து கொள்கிறார்.

அவர் அந்த காணொலியில், "சமீபத்தில் முடிவடைந்த நாடாளுமன்ற கூட்டத்தொடரில் மக்களவையில் சபாநாயகர் ஓம் பிர்லாவை 25 காங்கி



ரஸ் எம்.பி.க்கள் திட்டியதால் பா.ஜ.க. மற்றும் கர்னி சேனா தொண்டர்கள் கோபம் அடைந்துள்ளனர். இதுபோன்ற சம்பவம் மீண்டும் நடந்தால் நாங்கள் அந்த எம்.பி.க்களின் வீடுகளுக்குள் நுழைந்து சேதப்படுத்துவோம். இந்த சம்பவம் ராகுல் காந்தியின் உத்தரவின் பேரில் நடந்ததாக நான் நம்புகிறேன்.

ராகுல், கவனமாகக் கேளுங்கள், இதுபோன்ற சம்பவம் மீண்டும் நடந்தால், நாங்கள் உங்கள் வீட்டுக்குள் நுழைந்து உங்களைச் சுடுவோம். அந்த எம்.பி.க்களை 24 மணி நேரத்துக்குள் கைது செய்யாவிட்டால் அனைவரையும் சுட்டுக் கொல்வோம்" என்று மிரட்டல் விடுத்திருந்தார்.

இது தொடர்பாக ராஜ் சிங்கை ராஜஸ்தான் பொலிஸார் கைதுசெய்து விசாரித்து வருகின்றனர்.

# இராணுவ சட்டத்தை தன்னிச்சையாக அறிவித்தமை குற்றம்: தென் கொரிய முன்னாள் ஜனாதிபதிக்கு ஆயுள் தண்டனை

நாடாளுமன்றத்தில் எந்த விவாதமும் நடத்தாமல், இராணுவ சட்டத்தை தன்னிச்சையாக அமுல்படுத்த முயன்றமை குறித்த வழக்கில் தென் கொரிய முன்னாள் ஜனாதிபதி யூன் சுக் இயோலுக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

தென் கொரியாவின் ஜனாதிபதியாக இருந்தவர் யூன் சுக் இயோல் (வயது 65). இவர் கடந்த 2024 ஆம் டிசம்பர் மாதம் 3 ஆம் திகதி நாட்டு மக்களிடம் தொலைக்காட்சியில் உரையாற்றினார். அப்போது தென் கொரியாவில் இராணுவ சட்டத்தை அமுல்படுத்துவதாக திடீரென அறிவித்தார். நாட்டுக்கு எதிராக நாடாளுமன்றத்தில் செயல்படும் சில சக்திகளை வேரோடு எடுத்தெறிய வேண்டும். அதற்காக கடுமையான நடவடிக்கை அவசியம் என்று கூறினார். இது நாட்டில் பெரும் சர்ச்சையை எழுப்பியது. பொதுமக்கள், அதிகாரிகள் அதிர்ச்சி அடைந்தனர்.



இதையடுத்து தென் கொரிய நாடாளுமன்றத்தில் யூன் சுக் இயோலை பதவி நீக்கம் செய்யும் தீர்மானம் கொண்டு வரப்பட்டு நிறைவேற்றப்பட்டது. அதன் பின்னர் அவர் கைது செய்யப்பட்டார். அவர் மீதும் அவரது மனைவி மீதும் ஊழல் உட்பட பல வழக்குகள் நிலுவையில் உள்ளன. இந்நிலையில், நாட்டில் இராணுவ சட்டத்தை அமுல்படுத்த தன்னிச்சையாக முடிவெடுத்த குற்றத்துக்காக அவருக்கு ஆயுள் தண்டனை விதித்து சியோலில் உள்ள மத்திய மாவட்ட நீதிமன்ற நீதிபதி ஜி குய் இயான் நேற்று தீர்ப்பளித்தார்.

நீதிபதி தனது தீர்ப்பில் கூறும் போது, "தனது அரசியல் எதிரிகளை ஒடுக்க, நாடாளுமன்றத்துக்குள் இராணுவ வீரர்களை யூன் சுக் இயோல் அனுப்பி வைத்துள்ளார். சில காலங்களுக்கு நாடாளுமன்றத்தை முடக்கி வைக்கும் அவரது உள்நோக்கம் இதன்மூலம் தெளிவாகத் தெரிகிறது. நாட்டில் இராணுவ சட்டத்தை அறிவித்ததால் சமூக பாதிப்பு ஏற்பட்டுள்ளது. அதை எந்த வகையிலும் நியாயப்படுத்த முடியாது. எனவே முன்னாள் ஜனாதிபதி யூன் சுக் இயோலுக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்படுகிறது." என்று உத்தரவிட்டார்.

மேலும், யூன் சுக் இயோல் இராணுவ சட்டத்தை அமுல்படுத்துவதற்கு உதவியாக இருந்த முன்னாள் இராணுவ அமைச்சர் கிம் யாங் ஹியுனுக்கு 30 ஆண்டு சிறை தண்டனை விதிக்கப்பட்டது. முன்னதாக யூன் சுக் இயோலுக்கு மரண தண்டனை வழங்கும்படி அரசு தரப்பில் வாதிடப்பட்டது. எனினும், அந்த கோரிக்கையை நீதிமன்றம் ஏற்கவில்லை.

# இந்தோனேசியா - அமெரிக்கா வர்த்தக ஒப்பந்தம் கைச்சாத்து

அமெரிக்கா மற்றும் இந்தோனேசியா ஆகிய நாடுகள் வர்த்தகத் தடைகளைக் குறைப்பதற்கான புதிய உடன்படிக்கை ஒன்றை எட்டியுள்ளன.

அமெரிக்க இறக்குமதி வரிகளை 32 வீதத்திலிருந்து 19 வீதமாக குறைக்க இரு நாடுகளும் இணக்கம் தெரிவித்துள்ளன.



அமெரிக்காவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் 99 வீதத்துக்கும் அதிகமான பொருள்களுக்கான வர்த்தகத் தடைகளை நீக்க இந்தோனேசியா ஒப்புக்கொண்டுள்ளது.

இதன் மூலம் 30 பில்லியன் அமெரிக்க டொலருக்கும் அதிகமான அமெரிக்கப் பொருள்களைக் கொள்முதல் செய்வதற்கு இந்தோனேசியா வழிவகை செய்யும்.

இந்த ஒப்பந்தமானது இரு நாடுகளுக்கும் இடையிலான பொருளாதார உறவை மேலும் வலுப்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.





# பாகிஸ்தானில் கட்டடம் இடிந்து வீழ்ந்து 16 பேர் உயிரிழப்பு, 13 பேர் படுகாயம்

தெற்கு பாகிஸ்தானின் கராச்சி நகரில் ஏற்பட்ட வெடிவிபத்தில், ஒரு கட்டடம் இடிந்து வீழ்ந்ததில், குழந்தைகள் உட்பட 16 பேர் உயிரிழந்துள்ளனர்.

மேலும் 13 பேர் காயமடைந்துள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

"இது ஒரு எரிவாயு வெடிப்பு போல் தெரிகிறது, ஆனால் விசாரணை உண்மையான காரணத்தை வெளிப்படுத்தும்" என்று அந்நாட்டின் மூத்த நகர அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டு ஜூலை மாதம், கராச்சியின் ஏழ்மையான லியாரி பகுதியில் ஐந்து மாடி கட்டடம் இடிந்து வீழ்ந்ததில் 27 பேர் உயிரிழந்தனர். 10 பேர் காயமடைந்தமை குறிப்பிடத்தக்கது.

கனடா முரசு

வெள்ளிக்கிழமை | 20/02/2026

## 5 மில்லியன் டொலர் பரிசு வென்ற நபர்

கனடாவின் பிரிட்டிஷ் கொலம்பியா மாகாணத்தில் வசிக்கும் ஒருவருக்கு 5 மில்லியன் டொலர் லொட்டரி 'ஜாக்பாட் பரிசு' கிடைத்துள் ளது.

இருப்பினும், இவ்வளவு பெரிய தொகை வென்ற 03▶



# கனடாவின் கன்சர்வேட்டிவ் கட்சியின் மற்றுமொரு உறுப்பினர் கட்சித் தாவல்

## பெரும்பான்மை அதிகாரத்தை நெருங்கும் லிபரல் அரசு

**கனடாவில் மேலும் ஒரு கன்சர்வேட்டிவ் நாடாளுமன்ற உறுப்பினர் கட்சித் தாவி லிபரல் கட்சியில் இணைந்துள்ளார்.**

**இதன் மூலம் பிரதமர் மார்க் கர்னி தலைமையிலான லிபரல் அரசு பெரும்பான்மை அதிகாரத்தை பிடிப்பதனை மேலும் நெருங்கியுள்ளது.**

**அல்பெர்டா மாகாணத்தைச் சேர்ந்த எட்மண்டன் ரிவர்பெண்ட் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் மெட் ஜெனெரோ, கடந்த புதன்கிழமை லிபரல் கட்சியில் இணைவதாக அறிவித்தார்.**

முன்னதாக நவம்பர் மாதம் நோவா ஸ்கோஷியாவைச் சேர்ந்த கிறிஸ் என்டோர்மன்ட் மற்றும் டிசம்பர் மாதம் டொரொன்டோ பகுதியைச் சேர்ந்த மைக்கல் மா ஆகியோரும் கன்சர்வேட்டிவ் கட்சியிலிருந்து லிபரல்களுடன் இணைந்திருந்தனர்.

ஜெனெரோ, சுவிட்சர்லாந்தின் டாவோசில் நடைபெற்ற World Economic Forum மாநாட்டில் பிரதமர் கார்னி ஆற்றிய உரை தான் தனது முடிவில் முக்கிய தாக்கத்தை ஏற்படுத்தியதாக தெரிவித்தார்.

“தேசிய ஒற்றுமை நெருக்கடி எவ்வளவு தீவிரமானது என்பதை அந்த உரை வெளிப்படுத்தியது,” என்றார். அவர் தனது முடிவை காலை 10.15 மணியளவில் கன்சர்வேட்டிவ் தலைவர் பியே பொலியேவ் உள்ளிட்ட கட்சி நிர்வாகத்துக்கு மின்னஞ்சல் மூலம் தெரிவித்தார் என கூறப்படுகிறது. அதனைத் தொடர்ந்து பிரதமர் கார்னி சமூக ஊடகத்தில் அறிவிப்பு வெளியிட்டார்.

ஜெனெரோ பொருளாதார மற்றும் பாதுகாப்பு கூட்டாண்மைகள் தொடர்பான சிறப்பு ஆலோசகராக பணியாற்றுவார் என பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது.





# கனடா –அமெரிக்க எல்லையில் வாகனப் பயணங்களில் வீழ்ச்சி

கிழக்கு ஒன்டாரியோவிலிருந்து நியூயார்க் மாநிலத்திற்கான கனடா-அமெரிக்க எல்லை கடக்கும் வாகனப் பயணங்களில் தொடர்ந்து 12 ஆவது மாதமாக வீழ்ச்சி பதிவாகியுள்ளது.

கடந்த ஜனவரியில் மட்டும் சுமார் 18,000 பயணங்கள் குறைந்துள்ளன என புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

அலெக்ஸாண்ட்ரியா பே,ஒக்டன்ஸ்பர்க் மற்றும் மசெனா எல்லைச் சாவடிகளில் ஜனவரியில் மொத்தம் 111,000 வாகனங்கள் பதிவாகியுள்ளன.

இது 2025 ஜனவரியில் இருந்த 129,000 மற்றும் 2024 ஜனவரியில் இருந்த 126,000 பயணங்களுடன் ஒப்பிடுகையில் குறிப்பிடத்தக்க குறைவாகும். கிழக்கு ஒன்டாரியோவை இணைக்கும் மேற்கு நியூயார்க் மாநில எல்லைச் சாவடிகளில் 2025 பிப்ரவரி முதல் வீழ்ச்சி தொடர்கிறது.

டிசம்பரில்: 22,000 பயணங்கள் குறைவு

நவம்பரில்: 28,000 பயணங்கள் குறைவு

ஒக்டோபரில்: 27,000 பயணங்கள் குறைவு

அலெக்ஸாண்ட்ரியா பே (நியூயோர்க்) மற்றும் லான்ஸ்டவுன் (ஒன்டாரியோ) நகரங்களை இணைக்கும் தவுசன்ட் ஹைலன்ட்ஸ் பிரிட்ஜில் பாலத்தில் மிகப்பெரிய வீழ்ச்சி பதிவாகியுள்ளது.

அலெக்ஸாண்ட்ரியா பே எல்லைச் சாவடியில் ஜனவரியில் 33,500 வாகனங்கள் மட்டுமே பதிவாகியுள்ளன.

இது 2025 ஜனவரியில் இருந்த 43,300 வாகனங்களுடன் ஒப்பிடுகையில் பெரிய சரிவாகும். டிசம்பரில் மட்டும் லான்ஸ்டவுனிலிருந்து அலெக்ஸாண்ட்ரியா பே நோக்கி 12,000 இற்கும் மேற்பட்ட பயணங்கள் குறைந்துள்ளன.

ஒன்டாரியோவின் பிரெஸ்காட் நகரத்தையும் நியூயார்க் மாநில ஒக்டன்ஸ்பர்க் நகரத்தையும் இணைக்கும் Ogdensburg-Prescott International Bridge பாலத்தில் ஜனவரியில் 14,300 வாகனங்கள் பதிவாகியுள்ளன.

இது 2025 ஜனவரியில் இருந்த 19,500 பயணங்களிலிருந்து குறைந்ததாகும். 2025 பிப்ரவரி முதல் ஒவ்வொரு மாதமும் பயணங்கள் குறைந்து வருகின்றன. இதற்கு கனடா - அமெரிக்க வரிவிதிப்பு போரும், கனடிய டொலரின் மதிப்பு குறைவும் முக்கிய காரணங்களாகக் கருதப்படுகின்றன.





# பிரிட்டிஷ் கொலம்பியாவில் பனிச்சரிவில் சிக்கி ஒருவர் பலி

கனடாவின் தென்கிழக்குப் பகுதியில் உள்ள பிரிட்டிஷ் கொலம்பியாவின் பெர்னி அருகே ஏற்பட்ட பனிச்சரிவில் சிக்கி ஒரு ஸ்னோமொபைல் ஓட்டுநர் உயிரிழந்துள்ளார்.

மாதேசன் கிரீக் பகுதியில் இரண்டு பேர் ஸ்னோமொபைலில் பயணம் செய்துகொண்டிருந்தனர்.அப்போது ஒருவரால் சரிவான மலைப்பகுதியில் ஏறிச் செல்லும் போது பனிச்சரிவு ஏற்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த நபர் முழுமையாக பனியில் புதையுண்டு அவர் உயிரிழந்துள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது.

பெர்னி தேடுதல் மற்றும் மீட்பு குழுவினருடன் இணைந்து அதிகாரிகள் சம்பவ இடத்துக்கு சென்றனர் என தெரிவித்துள்ளனர்.

ஆனால், அது மாலை நேரமாக இருந்ததாலும், அந்த பகுதி மிகுந்த அபாயம் வாய்ந்த பனிச்சரிவு மண்டலமாக அடையாளம் காணப்பட்டிருந்ததாலும், உடனடியாக தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியவில்லை என கூறப்பட்டுள்ளது.

நேற்றைய தினம் பாதிக்கப்பட்ட நபரின் உடல் மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அவர் வானிலை மற்றும் செயல்பாட்டுக்கு ஏற்ற பாதுகாப்பு உபகரணங்களையும், பனிச்சரிவு பாதுகாப்பு சாதனங்களையும் அணிந்திருந்தார் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.




# நிமோனியா நோயாளிகள் எண்ணிக்கை அதிகரிப்பு



கனடாவில் கடந்த ஆண்டில் நிமோனியா காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை சுமார் 30 வீதமாக அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கனடிய சுற்றாடல் தகவல் நிறுவனம் இந்த தகவல்களை வெளியிட்டுள்ளது.

குறிப்பாக 5 முதல் 17 வயதுக்குட்பட்ட குழந்தைகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த வயது பிரிவில் நிமோனியா காரணமான அனுமதிகள் முந்தைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் இருமடங்குக்கும் அதிகமாக உயர்ந்துள்ளன.

மோன்ரியாலில் உள்ள மொன்றியால் சிறுவர் மருத்துவமனை தொற்றுநோய் நிபுணர் டாக்டர் ஜெஸ்ஸி பாப்பன்பர்க் கூறுகையில், 2024-2025 சுவாச நோய் பருவம் நிமோனியா நோயாளிகளால் மிகப் பரபரப்பாக இருந்தது என்பதை புள்ளிவிவரங்கள் உறுதிப்படுத்துகின்றன.

கடந்த ஆண்டின் கடுமையான காய்ச்சல் பரவல், நிமோனியா அதிகரிப்பிற்கு முக்கிய காரணமாக இருந்திருக்கலாம் என தெரிவித்துள்ளார்.

வைரஸ் மூலம் ஏற்படும் நிமோனியா, காய்ச்சலின் ஒரு தீவிர விளைவாக அமையக்கூடும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

காய்ச்சல் தொற்று சுவாசக் குழாயில் உள்ள செல்களை பாதிப்பதால், பாக்டீரியாக்கள் எளிதில் உடலில் நுழைய வாய்ப்பு ஏற்படுகிறது.

இதனால் பாக்டீரியா நிமோனியா உருவாகும் அபாயம் அதிகரிப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

## 5 மில்லியன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பின்னரும் லொட்டரி விளையாடுவதை நிறுத்த எந்தத் திட்டமும் இல்லை என அவர் தெரிவித்துள்ளார்.

ரிச்ச்மண்ட் நகரைச் சேர்ந்த ஜாக்கி எல். என்பவர், கடந்த ஜனவரி 28 ஆம் திகதி நடைபெற்ற Lotto 6/49 க்ளாசிக் 5 மில்லியன் ஜாக்பாட் பரிசை “க்விக் பிக்” (Quick Pick) முறையில் வென்றதாக B.C. Lottery Corporation (BCLC) வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெற்றி பெற்ற ஜாக்கி எல்., தமது வீட்டுக் கடனை முழுமையாக செலுத்துவது, ஓய்வு வாழ்க்கைக்காக சேமிப்பு செய்வது மற்றும் தமது குழந்தைகள், பேரக்குழந்தைகளுக்கு ஆதரவு அளிப்பது போன்ற திட்டங்கள் உள்ளன என தெரிவித்துள்ளார்.

“நாங்கள் இப்போது முழுமையாக நிம்மதியாக இருக்க முடியும் ” என அவர் கூறியுள்ளார்.

அதே நேரத்தில், தமது வாழ்க்கை முறையில் பெரிய மாற்றம் செய்யும் எண்ணமோ, பணத்தை சீராக கையாளும் பழக்கத்தை விடும் எண்ணமோ இல்லையெனவும் தெரிவித்துள்ளார்.

